1983 சனவரி 28]

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தீண்டாமைக் குற்றங்களை விசாரிப்பதற்காகத் திருச்சியிலே அமைக்கப்பட்டிருக்கும் தனிக் கோர்ட்டுக்கு வருவது என்றால் 50 மைல், 60 மைல் தூரம் வரவேண்டியிருக்கிறது. எனவே, கேம்ப் கோர்ட்டை டிவிஷனுக்கு இரண்டு நாள் சென்று விசாரிக்கும் வகையில் அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவையின் தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்புக் குற்றச்சாட்டுக்களை அல்லது குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கு திருச்சி, திருநல்வேலி, தஞ்சாவூர், மற்றும் மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களில் இதற்கெனத் தனியாக நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. ஆனால் உறுப்பினரவர்கள் நடமாடும் நீதிமன்றத்தைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அண்மையிலே ஆந்திராவிலே அமைக்கப்பட்டிருப்பது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. தமிழக அரசும் இது குறித்து தமிழகத்திலே தற்போது நடமாடும் நீதிமன்றங்கள் இல்லை என்பதால் சென்னை உயர் நீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடலூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனை வழங்க நில ஆர்ஜிதம் செய்யும் திட்டம்.

*வினா எண் 40—திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதியில் கூடலூர் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுவசதி மனைக்குரிய இடங்களை ஆர்ஜிதம் செய்ய காலதாமதம் ஏற்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம்.

(ஆ) கூடலூர் கிராமத்தில் வீடு இல்லாத 125 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக சர்வே எண் 1199, மற்றும் 1196/1, மற்றும் 1197 ஆகியவைகளில் 5.51 ஏக்கர் புஞ்சை நிலங்கள் தமிழ்நாடு ஆதிதிராவிட நலத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துகின்ற சட்டம், 1978 இன் கீழ் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 29–3–80–ல் இழப்பீட்டுத் தொகைக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் நில உரிமையாளர்கள் நில ஆர்ஜிதத்தை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்திலே ரிட் மனு தாக்கல் செய்தனர். இதன் பேரில் உயர்நீதிமன்றம் 15–4–80–ல் இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டது. பின்னர் உயர்நீதிமன்றம் தமிழ்நாடு சட்டம் 1978 ஆம் ஆண்டின்

சட்டம் செல்லாது என்றும் மேற்படி ரிட் மனுவை அனுமதித்தும் 9—9—81 ல் தீர்ப்பளித்தது. எனவே, மேற்குறிப்பிட்ட நில ஆர்ஜிதத்தில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்று மதுரை மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, ஆர்ஜிதம் செய்ய ஆரம்பிக்கப்பட்ட பிறகு எத்தனை நாட்களில் வழக்கு மன்றத்திற்குச் சென்றார்கள்? அதிகாரிகளின் காலதாமததத்தால்தான் நிலவுடைமையாளர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றதாகச் சொல்கிறார்கள். இது உண்மையா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் விடையிலேயே அவர்கள் தடை வாங்கு வதற்கு எந்தத் தேதியிலே மன்றத்திற்குச் சென்றார்கள் என்று தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துக் கூறியதைப்போல அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்களா என்பதற்கான விவரங்கள் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் இதைப்பற்றி ஆராய்ந்துதான் பதில் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்வது சம்பந்தப்பட்ட ஏராளமான வழக்குகள் பல்லாண்டுகளாக நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றன. எனவே, ஒட்டுமொத்தமாக ஆதிதிராவிடர்களுக்கு நில ஆர்ஜிதத்தைத் துரிதப்படுத்துவதற்காக இது சம்பந்தப்பட்ட வழக்குகளைப் பைசல் செய்வதற்காக விசேஷ நீதிமன்றம் அமைக்கின்ற செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனை அளிக்கப்படவேண்டும், அதுவும் விரைவாக அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்பதிலே அக்கறை கொண்டதன் காரணமாக 1978 ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டது ஆனால் இந்தச் சட்டத்தை உயர்நீதிமன்றம் செல்லாது என்று தீர்ப்பளித்து விட்டது. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமான அளவில் உயர்நீதி மன்றத்திலே இடைக்காலத் தடை வாங்கி நிறைய கேஸ்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் என்னிடத்திலே இருக்கின்ற விவரங்களின்படி, தற்போது உயர்நீதி மன்றத்திலே இருக்கின்ற வழக்குகளின் எண்ணிக்கை 401. இந்த 401 கேஸ்களைத்தான் உயர்நீதிமன்றம் விசாரித்துக்கொண்டு இருக்கின்றது. இதற்கென்று தனியாக ஒரு நீதிமன்றம் அமைக்கும் திட்டமும், அப்படிப்பட்ட எண்ணமும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. வேண்டுமானால் வருங்காலத்தில் இதைப் பற்றிச் சிந்திக்கலாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1983 சனவரி 28]

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதிதிராவிட மக்களுக்கு குடியிருப்புகளுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்கிறபோது மிகவும் காலதாமதம் ஆகிறது. நிறைய வழக்குகளும் தேங்கி இருக்கின்றன. நான் கேட்க விரும்புவது, நீதிமன்றம் தனியாக ஆரம்பிப்பதற்கு முன்னால், நில ஆர்ஜித சட்டத்திலே வேறு சில ஷரத்துக்களைச் சேர்த்து துரிதமாக இந்த நிலத்தைப் பெறுவதற்கு அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே நிலம் கையகப் படுத்துகின்ற சட்டம் 1894 ஆம் ஆண்டு சட்டத்தின்படி செய்யப் பட்டு வருகிறது. இதிலே காலதாமதம் ஏற்படுகின்றது என்ற காரணத்தினாலேதான் 1978 ஆம் ஆண்டு இதற்கென்று தனியாக ஒரு சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் அந்தச் சட்டம் செல்லாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பின் காரணமாக தற்போது அரசு அந்தத் திட்டத்தைக் கைவிடாமல் பழைய சட்டத்தின்படியே ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றது. இதிலே காலதாமதம் ஏற்படுவதற்கான காரணங்களை உறுப்பினர் உணர்ந்து கொள்வார் என்று நம்பு கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. எல். இளையபெருமாள் : சபாநாயகர் அவர்களே, (குறுக்கீடு) அது என்னுடைய தவறு இல்லை. மற்றவர்கள் கேட்பதிலிருந்து நான் கேட்க விரும்புகிறேன். எல்லோருக்கும் சம பங்கு உண்டு என்பதை நான் அறிவேன். அமைச்சர் அவர்கள் சொன்னபோது 1978 ஆம் ஆண்டு நில ஆர்ஜிதம் கொண்டு வரப் பட்டதும் அந்தச் சட்டத்தை உயர்நீதி மன்றம் செல்லுபடியாகத் தக்கதல்ல என்று சொன்னதாகவும் சொன்னார்கள்.

* * * *

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் இளைய பெருமாள் அவர்கள் கூறுவது முற்றிலும் தவறானதாகும். இந்தச் சட்டம் கொண்டு வந்ததன் நோக்கமே ஆதிதிராவிடர்களுக்கு, அருந்ததியர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா விரைவிலே வழங்கப்பட வேண்டும் என்பதுதான். ஆனால் கடந்த காலத்திலே இருந்த சட்டம் காலதாமதத்திற்கு வழி வகுத்தது. சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகள் ஆனபோதிலும் இன்றும்கூட ஆதிதிராவிட மக்களுக்கு குடியிருக்க வீட்டுமனை இல்லை என்ற காரணத்தினால்—இதுகாறும் இருந்து வந்த சட்டத்தில் சந்து பொந்துகளை அடைத்து குறுகிய காலத்திலே—மிக விரைவிலே ஆர்ஜிதம் செய்து தரவேண்டும் என்பதற்காகத் தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

** இதற்கிடையிலே இந்த வழக்கைப் பொறுத்தவரையில் ** it is being stayed by the Supreme Court ஆகவே இது சப் ஜுடிஸ் ஆகிறது. அதைப்பற்றிப் பேசக்கூடாது. அப்படிப் பேசியதைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழக்குமன்றத்திலே இருப்பதால் எது எது சப் ஜுடிஸ் என்று கருதப்படுகிறதோ அவைகள் எல்லாம் பின்னர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அரிசி விலை உயர்வு

திரு என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அரசுக்கு மிகவும் அவசரமானது மட்டுமல்ல, மிக அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருப்பதை நான் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது இப்போது சென்னை நகரத்திலே கிலோ அரிசிக்கு 50 பைசா திடீரென்று 2, 3 நாட்களில் உயர்ந்திருக்கிறது. இங்கே இருக்கக்கூடிய ஓட்டல்களில் பூராவும் விலையை உயர்த்தி விட்டார்கள். மதுரை வட்டாரத்தில் 2, 3 நாட்களில் 1 கிலோ அரிசி 1 ரூபாய் என்ற அளவிற்கு மார்க்கெட்டிலே உயர்ந்து விட்டது. அதோடு மட்டுமல்லாமல் தமிழக அரசினுடைய நியாய விலைக் கடைகளிலே அந்த தானிய வினியோகம் செய்வதையே நிறுத் விட்டார்கள் என ஏராளமான தந்திகள் எனக்கு வந்திருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அது தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தந்திகளை எல்லாம் எங்களிடம் கொடுத்துவிடுங்கள். நடவடிக்கை எடுக்கிறோம். (குறுக்கீடு). இதிலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் வருகிறது. தஞ்சை மாவட்டத்திலே உள்ள நெல் வியாபாரிகளைப் பற்றியெல்லாம் வருகிறது. அதிலேகூடப் பேசலாம் மாண்புமிகு உறுப்பினர்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதனால் இதைப்பற்றி ஒரு தனி அறிக்கை வெளியிட்டு விவாதிக்க வேண்டியது அவசியம். காரணம் என்னவென்றால் ஆளுநர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.